பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் [illegible]

மலர்: 19] சென்னை: புரட்டாசி 27 (13—10—71) புதன் வெளியூர்: புரட்டாசி 28 (14—10—71) வியாழன் [இதழ்: 100

சென்னை மாநகராட்சியின் முன் ஆயத்தம்

சென்னை, அக். 13—

வருகிற மழை காலத்தில் வெள்ளச் சேதத்தைத் தவிர்க்கும் வகையில் நகரின் பள்ளமான பகுதிகளிலும், நெரிசலான பகுதிகளிலும் உடனடியாக மழை நீரை வடியச் செய்வதற்கு முன் ஆயத்தமாக இருக்குமாறு சென்னை மாநகராட்சி வட்டப் பொறியாளர்கட்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நகரின் 120 கோட்டங்களிலும் உள்ள வடிகால் நிலைமைகளை ஒன்று விட்டு ஒரு நாளைக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

அவசர நிலைப் பிரகடனம்

தமிழக முதல்வரின் கருத்து

புதுடில்லி, அக். 12—

நாட்டின் பகுதிகளில் அவசர நிலையைப் பிரகடனப்படுத்துவது குறித்து மாநில முதல்வர்களை மத்திய அரசின் உள்துறையமைச்சு கலந்தாலோசிக்கக்கூடும் என்று தெரிகிறது.

டில்லியில் தற்போது தங்கியுள்ள முதலமைச்சர்கள் முக்கியமாக நிதிநிலை குறித்து விவாதிக்கவே வந்திருக்கிறார்கள்.

"அவசர நிலைப் பிரகடனம் பற்றிய பிரச்சினையில் மாநிலங்கள் கலந்தாலோசிக்கப்பட வேண்டும்" என்று தமிழக முதல்வர் வற்புறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

உள்துறை அமைச்சகம், இப்பிரச்சினை குறித்து மாநில முதலமைச்சர்களை இப்போதே கலந்தாலோசிக்குமா அல்லது பிறகு வேறொரு சமயம் வைத்துக்கொள்ளுமா என்பது புரியவில்லை.

கலைஞர்-இந்திரா சந்திப்பு

வங்கதேசப் பிரச்னை குறித்துப் பேச்சு

புதுடில்லி, அக். 12—

முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இன்று இங்கு தலைமையமைச்சர் இந்திரா காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். வங்காள தேசம் பிரச்சினைகள் பற்றியும், அந்தப் பிரச்சினை இந்த நாட்டின் பொருளாதாரத்தையும் — பாதுகாப்பையும் எப்படிப் பாதிக்கிறது என்பது பற்றியும் அவர்கள் விவாதம் நடத்தினர்.

இந்தப் பேச்சுக்குப் பின்னர் செய்தியாளர்கள் முதலமைச்சரைச் சந்தித்தனர்; 'மாநிலங்களுக்கு அதிக அளவு சுயாட்சி வழங்கும் சம்பந்தமான பிரச்சினை இந்தப் பேச்சின்போது எழுப்பப்பட்டதா?' என்று செய்தியாளர்கள் கேட்டனர்; 'இந்தப் பிரச்சினை சம்மந்தமாக விவாதிப்பதற்கு இது பொருத்தமான நேரம் அல்ல' என்று முதலமைச்சர், செய்தியாளரிடம் கூறினார்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதியம்

மாதந்தோறும் முதல் தேதியன்றே வழங்கப்படும் — தமிழக அரசு ஏற்பாடு

அடுத்த சனவரி முதல் நடைமுறைக்கு வரும்

சென்னை, அக். 13—

அரசு ஊழியர்களுக்குத் தரப்படுவது போன்றே ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்றே சம்பளம் வழங்கச் செய்வதற்குத் தமிழக அரசு ஏற்பாடு செய்திருக்கிறது; இந்த ஏற்பாடு 1972 சனவரி முதல் நடைமுறைக்கு வரும்.

"இந்த ஏற்பாட்டின் கீழ், ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள துவக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு மாத முதல் தேதியன்றே சம்பளத்தை, அரசுக் கருவூலங்கள் வழங்கும்; பின்னர், சம்பளப் பட்டுவாடா செலவுக் கணக்கில் ஊராட்சி ஒன்றியப் பங்கை அவற்றிற்கு அரசு வழங்கும் மானியத் தொகையிலிருந்து வசூலிக்கப்பட்டுவிடும்"

என்று கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்துள்ளார்.

உதவி பெறும் துவக்கப் பள்ளிகள் உட்பட ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள துவக்கப் பள்ளி ஆசிரியர்கள் இந்த ஏற்பாட்டின் மூலம் அரசு ஊழியர்களைப் போலவே மாதம் முதல் தேதியன்றே சம்பளம் பெறுவர்.

"ஊராட்சிக் கல்வி நிதி விசாரணைக் குழுவின் சிபாரிசுகளின்படி இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது" என்று அமைச்சர் அறிக்கையில் கூறியுள்ளார்.

ஜான்சிபாரில் இந்திய வியாபாரிகட்கு நெருக்கடி

52 குடும்பங்கள் வெளியேறும்

ஜான்சிபார், அக். 13—

இந்திய மரபைச் சேர்ந்தவர்களான நூறு ஆசிய வணிகர்களுக்கு — அவர்களுடைய வியாபார லைசென்சைப் புதுப்பித்துக்கொள்ள அரசு அனுமதி மறுத்துவிட்டதுடன், அவர்கள் தங்கள் குடும்பங்களுடன் ஜான்சியாரை விட்டு வெளியேற வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இத்துடன் இதுவரையில் 152 குடும்பங்கள் ஜான்சிபார் தீவை விட்டு வெளியேற உத்தரவிடப்பட்டிருக்கின்றனர்.

'வேளாண்மை வருமான வரி வசூலை மத்திய அரசிடம் விட ஒப்போம்'

'வேளாண்மையல்லாத வரி வசூலையும் மாநில அரசிடமே விட்டுவிட வேண்டும்'

முதல்வர்கள் மாநாட்டில் தமிழக முதல்வர் திட்டவட்ட அறிவிப்பு

புதுடில்லி, அக். 13—

'வேளாண்மை வருமான வரியை மத்திய அரசின் நிர்வாகத்தில் ஒப்படைப்பதைத் தமிழ்நாடு அரசு அறவே விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துவிட விரும்புகிறேன். வேளாண்மை வருமான வரி வசூலை மாநில அரசின் அளவிலேயே திறம்படக் கவனித்துக்கொள்ள முடியும் என நாங்கள் நம்புகிறோம்.

"எங்கள் மாநிலத்தில் அண்மையில் வேளாண்மை வருமான வரி அமைப்பைச் சீரமைத்துள்ளோம். வேளாண்மை வருமானத்துக்கேற்ப, ஸ்டாண்டர்டு ஏக்கர்' என்ற முறையை வகுத்துள்ளோம்; ஐந்து ஏக்கருக்கும் அதற்குக் குறைந்தும் நிலமுள்ள அனைவருக்கும் வேளாண்மை வருமான வரி விலக்கு அளிப்பது என்று இக்கூட்டத்தின் முன் பரிந்துரைக்கப்பட்டுள்ளது; எங்கள் வரி விதிப்பு முறை, இதைவிட நியாயமானதாகும்; பயிரிடப்படும் பயிர்களின் வருமான அடிப்படையில் எங்கள் சட்டம் விலக்கு அளிக்கிறது; கூடுதல் வருமானம்தரும் பயிர்களைப் பயிரிடும் விவசாயிக்குக் குறைந்த பரப்பளவுக்குத்தான் விலக்கு அளிக்கப்படுகிறது; மேலும், 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையில் வரியை உடன்பட்டு நிச்சயிப்பதற்கு ('கம்பவுண்டிங்') இந்த வரியின் கட்டுக்கோப்பு இடம் தருகிறது.

"முதற்படியில் 5 சதவீதத்திலிருந்து தொடங்கி ஆண்டொன்றுக்கு ரூ. 50,000-க்கு மேற்படுகின்ற வருமானமுள்ளவருக்கு 55 சதவீதம்வரை வரி விதிக்கப்பட்டுள்ளது. இவ்வரி விதிப்பு மூலம் எங்கள் விவசாய வருமான வரி வருவாய் ஓரளவுக்கு உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

"வரியை ஏய்ப்பதற்காக விவசாய வருமானம் அதிகமாகத் தெரிவிக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டுள்ளது; இதைத் தவிர்க்க மத்திய வருமான வரி அதிகாரிகள் தங்களிடம் தெரிவிக்கப்பட்ட வேளாண்மை வருவாயைப் பற்றி மாநில அரசுகளுக்குத் தெரிவிப்பார்களேயானால், வரி ஏய்ப்பு ஏற்படாதவாறு தவிர்க்கலாம்; இந்தத் தகவலை அடிப்படையாக வைத்தும் மாநில அரசுகள் வேளாண்மை வருமான வரியை விதிக்க முன்வரலாம்.

"நில உச்சவரம்புகளைச் செயற்படுத்திய பின்னர் வேளாண்மையின் மூலம் கிட்டும் வருவாய் இனங்கள் முன்பு கிட்டிவந்ததைவிடக் குறைந்தே உள்ளன என்று நாங்கள் நம்புகிறோம்; எனவே, தற்போது விவசாயம் அல்லாத பிற பெரிய வருவாய் இனங்களின்மேல் விதிக்கப்படும் வரி விகிதங்கள் விவசாய வருமானத்திற்குப் பொருந்தமாட்டா.

"மாநிலங்களுக்குப் பிரித்தளிக்கப்படும் வருவாய்த் தொகுப்பில், தற்போது 75 சதவிகிதம் ஒதுக்கித் தரப்படுவதற்குப் பதிலாக, வருமான வரி வகையில் கிட்டும் வரி வருவாய் முழுவதும் ஒதுக்கித் தரப்பட வேண்டுமென நாங்கள் கருதுகிறோம்; வருமான வரி நிர்வாகத்தில் இது மத்திய அரசுக்கு எந்த வகையான ஊக்கமும் அளிக்காது என்று சொன்னால் வேளாண்மை வருவாய் அல்லாத பிற வருமானத்திற்கும் வருமான வரி அமைப்பை ஏற்று நடத்தும் நிர்வாகத்தை மாநில அரசுகள் மிக மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

"எனவே, வேளாண்மை அல்லாத வருவாயையும்—பிற வருவாயையும் ஒன்றிணைத்து, வேளாண்மை வருமான வரியை மத்திய அரசிடம் ஒப்புவிக்கும் செயற்குறிப்பை நாங்கள் ஆதரிக்கவில்லை என்பதை மீண்டும் வலியுறுத்திக்கூற விரும்பும் அதே நேரத்தில், வேளாண்மை அல்லாத வருவாய்மீது விதிக்கப்படும் வருமான வரியையும் மாநிலங்களுக்கு மாற்றித் தரும்படி நாங்கள் கோருகிறோம்; இப்படிச் செய்தால் மாநிலங்களுக்கு மாநிலம் வரி விகிதங்கள் வேறுபடாமல் இருக்க வேண்டிய முறைகளையும் கையாள வேண்டும்; இதற்காக அனைத்திந்திய அளவில் மாநிலங்களுக்கிடையே ஒப்பந்தங்கள் செய்துகொள்ளலாம்."

—முதலமைச்சர் மு. கருணாநிதி

(டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில்)

கங்குலிக்குக் கட்டாய ஓய்வு

குடியரசுத் தலைவர் ஆணை பிறப்பித்தார்

புதுடில்லி, அக். 13—

இரயில்வே போர்டு தலைவர் பி. சி. கங்குலி உடனே பதவியிலிருந்து ஓய்வு பெற வேண்டும்—என்று குடியரசுத் தலைவர் வி. வி. கிரி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பதவியிலிருந்து அவர் ஓய்வு பெறுவதற்கு இன்னும் மூன்று மாதம் இருக்கும்போது, முன்கூட்டியே அவர் பதவியிலிருந்து விலகுமாறு செய்யப்படுகிறார்.

கங்குலி, 1972 சனவரி 15-ந் தேதிதான் பதவியிலிருந்து ஓய்வு பெற வேண்டும்; எனவே, அவருக்கு மூன்று மாதச் சம்பளமும்—அலவன்சும் தரப்படும். விதிகளின்படி மூன்று மாத நோட்டீசுக்குப் பதிலாகச் சம்பளம் கொடுக்கப்படுவதாகக் குடியரசுத் தலைவரின் உத்தரவு கூறுகிறது.

கடந்த மூன்று நாட்களாக டில்லி அருகேயுள்ள சராய் ரோகில்லா இரயில் நிலையத்தில் தமமுடைய பெட்டியில் பிடிவாதமாகத் தங்கியிருக்கும் கங்குலிக்கு, அவரைப் பதவியிலிருந்து ஓய்வு பெறுமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவை போர்டு அதிகாரி ஒருவர் மூலம் அனுப்பப்பட்டது.

35 வயதுக்கு முன்பு கங்குலி அரசாங்க ஊழியத்தில் சேர்ந்ததாகவும், அவருக்கு ஏற்கனவே 50 வயதாகிவிட்டதாலும் பொது நலனைக் கருதியும் கங்குலியை ஓய்வுபெறச் செய்வது அவசியம் என்று குடியரசுத் தலைவர் திருப்தியடைந்திருப்பதாகவும், எனவே ஓய்வு பெறும்படி கங்குலிக்கு உத்தரவிடுவதாகவும் அந்த உத்தரவு கூறுகிறது.

விதிகளின்படி, கங்குலிக்கு மூன்று மாதச் சம்பளமும்—அலவன்சும் கொடுக்க வேண்டும் என்ற உத்தரவின்படி, அந்த உத்தரவுடன் ரூ. 10,725-க்கு ஒரு 'செக்'கும் அனுப்பப்பட்டுள்ளது.

கங்குலியை, 'ஓர் இரயில்வே ஊழியர்' என்று உத்தரவு குறிப்பிட்டிருக்கிறது; கங்குலி இனி அரசு ஊழியரல்லராதலால், இன்றைக்குள் அவர் இரயில் பெட்டியிலிருந்து இறங்காவிட்டால் நிர்ப்பந்தமாக வெளியேற்றப்படலாம்.

குடியரசுத் தலைவர் உத்தரவை எதிர்த்து வழக்காட முடியாது; ஆனால் இதுபோன்ற வழக்கை அண்மையில் விசாரித்த மைசூர் நீதிமன்றம், 'இந்த விதி அரசியல் சட்டத்துக்கு முரணானது' என்று கூறியது.

வானொலியில் பாகிஸ்தான் அதிபர் அறிவிப்பு

புத்தாண்டுக்கு முன்பு மத்திய அரசு ஏற்பட்டுவிடுமாம்

அதிகார மாற்றத்தைத் துரிதப்படுத்துவதற்கு தேசிய சட்டமன்றம் விரைவில் கூடுமாம்

புதுடில்லி, அக். 13—

"பாகிஸ்தான் புதிய மத்திய அரசாங்கம் புத்தாண்டுத் தொடங்குமுன் ஏற்பட்டுவிடும்" என்று பாகிஸ்தான் அதிபர் யாகியா கான் கூறினார்; ஆனால், அந்த அரசின் தன்மை -- அதில் யார் யார் இருப்பர் என்ற விவரங்களைப் பற்றி எதுவும் கூறவில்லை.

பாகிஸ்தான் வானொலியில் தம்முடைய நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், 'பாகிஸ்தானுக்குப் புதிய அரசியல் அமைப்பு டிச. 27-ம் நாள் கூட்டப்படும்' என்றார்.

அதிகார மாற்றத்தைத் துரிதப்படுத்துவதற்காக தேசியச் சட்டமன்றக் கூட்டம் துவங்கிய பிறகு விரைவிலேயே மத்திய அரசு அமைக்கப்படும்" என்று அவர் கூறினார்.

"அரசியல் சட்டத்துக்குத் திருத்தங்களைக் கூற தேசிய சட்டமன்றத்திற்கு உரிமை உண்டு" என்றார்; ஆனால், தம்முடைய இரத்து அதிகாரத்தை அவர் கைவிடவில்லை.

முஜிபுர் ரகிமான் கதி என்ன?

வங்காள தேசத் தலைவர் ஷேக் முஜிபுர் ரகிமான் பற்றியோ அல்லது அவருக்கு என்ன நேர்ந்தது என்பதுபற்றியோ அதிபர் யாகியா கான் தம்முடைய உரையில் ஏதும் குறிப்பிடவே இல்லை.

இந்தியாமீது பாய்ச்சல்

யாகியா கானின் வானொலிப் பேச்சில் பாதி இந்தியாவைத் தாக்குவதாகவே இருந்தது; பாகிஸ்தான் எல்லைக்கு இந்தியா படைகளை அனுப்புவதாகவும், தம்முடைய நாட்டின்மீது இந்தியா ஆக்கிரமிப்பு நடத்தக்கூடிய அபாயம் இருப்பதாகவும், தாம் சமாதானத்தையே விரும்புவதாகவும் கூறினார்.

எல்லையில் இந்தியப் படைகள் இருப்பதாகவும், பாகிஸ்தான் உள்நாட்டுப் பிரச்சினையில் இந்தியா தலையிடுவதாகவும் குற்றஞ்சாட்டினார்.

ஒரே வழி அதுதானும்!

"இந்தியா தன்னுடைய படைகளை எல்லையிலுள்ள இடங்களிலிருந்து திரும்பப் பெறவேண்டும்; பாகிஸ்தான் உள் விவகாரங்களில் தலையிடுவதை இந்தியா நிறுத்தவேண்டும்; அதுதான் வங்காள தேசப் பிரச்சினை தீருவதற்குள்ள ஒரே வழியாகும்" என்று யாகியா கான் கூறினார்.

இராணுவத்தினர் ஓய்வு கால ஊதியம்

சென்னை, அக். 13—

தக்கலையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வாழும் ஓய்வு பெற்ற இராணுவத்தினருக்கு தக்கலையில் உள்ள துணைக் கருவூலத்தில் 13—10—71 அன்று ஓய்வு கால ஊதியம் தரப்படும்.

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி

நிர்வகிக்கத் தனிக் குழு அமைப்பு

திருச்சி, அக். 11—

முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் திரட்டிவரும் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதியை நிர்வகிப்பதற்கும், அதை எந்தெந்த வகையில் பயன்படுத்தலாம் என்பதற்குரிய ஆலோசனைகளை வழங்கவும் அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் தலைமையில் பத்துப் பேர்களைக் கொண்ட குழுவைத் தமிழக அரசு நியமித்துள்ளது.

திருவாளர்கள் குன்றக்குடி அடிகளார் எம்.எல்.சி., ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என்.வி.என். சோமு எம்.பி., தமிழக அரசின் சமூகநலத் துறைச் செயலாளர், போலீசு ஐ.ஜி., மக்கள் நல்வாழ்வு -- குடும்ப நலத் துறை இயக்குநர், மாநில தொழுநோய்த் துறை அதிகாரி, சமூகநலத் துறைத் துணைச் செயலாளர், நிதித் துறைத் துணைச் செயலாளர் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

அதிகாரச் சார்பற்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் இரண்டாண்டுகள் ஆகும்; மூன்று திங்களுக்கு ஒருமுறை இக்குழு கூடும்.

தமிழ்நாட்டில் உள்ள பிச்சைக்காரர் மறுவாழ்வு விடுதிகளில் உள்ள எல்லாப் பிச்சைக்காரர்கட்கும் இந்த நிதியுதவி மூலம் பயன் கிட்டும்.

விடுதலைப் போராட்ட வீரர்கட்கு வீடு

இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழக அரசின் திட்டம்

மதுரை, அக். 13—

சுதந்தரப் போராட்ட வீரர்கள் வீடு கட்டிக்கொள்வதற்கென்று 50 பேருக்கு இலவச நிலம் வழங்கத் தமிழக அரசு திட்டம் வகுத்துள்ளது.

இந்தத் திட்டத்தின்படி, மூன்றுமுதல் ஐந்து செண்ட்வரை உள்ள நிலம் மதுரையில் வழங்கப்படும்; இதற்கெனத் திருநகரில் இரண்டு ஏக்கர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் இலட்சுமிகாந்தன் பாரதி, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"இன்னும் ஒரு மாதத்தில் இந்த யோசனை இறுதி வடிவம் பெறும்.

இங்கு கட்டப்படும் வீடுகளுக்கான கட்டடச் செலவில் 75 சதவிகிதத்தை வீட்டு வசதி வாரியம் ஏற்றுக்கொள்ளும்படி -- அதனிடம் கோரப்படும்; எஞ்சிய தொகையை வீட்டுக்குரியவர்கள் ஏற்கவேண்டும்; இதற்கெனக் கடன் வழங்க அரசிடம் கோரப்படும்.

இம்மாதிரி சுதந்தரப் போராட்ட வீரர்கட்கு வீடு கட்டித் தரும் ஏற்பாடு இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன்முறையாகச் செயல்படுத்தப்படவிருக்கிறது.

மதுரையில் சுதந்தரப் போராட்ட வீரர்கள் 757 பேர் உள்ளனர்; இந்தப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளும்படி அனுப்பப்பட்டுள்ள மேலும் 250 மனுக்கள் பரிசீலனையில உள்ளன; இவை இன்னும் இரண்டு மாதத்தில் 'பைசல்' செய்யப்படும்.

தி.மு.க. ஆட்சிமன்றக் குழுக் கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிமன்றக் குழுக் கூட்டம், 17-10-71 ஞாயிறு காலை 9-மணிக்கு சென்னை—அண்ணா சாலையில் உள்ள தி. மு. கழகச் சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில், கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

பொருள்:

பொள்ளாச்சி நாடாளுமன்ற இடைத் தேர்தல்

'அறிவகம்' சென்னை-18 10-10-'71

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

சென்னை நகரின் நில--நீர் அமைப்பு

அழகுற மாற்றியமைப்பதற்குத் திட்டம்

ஆலோசனை கூற ஐ. நா. நிபுணர் வருகை

சென்னை, அக். 13—

சென்னை நகரை இன்னும் எப்படி எப்படி எல்லாம் அழகுபடுத்தலாம் என்று ஆலோசனை கூறுவதற்காக ஐ. நா. நிபுணர் ஒருவர் சென்னைக்கு வருகிறார்.

இந்தத் தகவலை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள், நிருபர்களிடம் தெரிவித்தார்; இத்தொடர்பில் அவர் குறிப்பிட்டதாவது:—

"சென்னை நகரின் நில -- நீர் அமைப்புகளை அழகாக மாற்றியமைப்பதுபற்றி வழிவகை காண 1962-ம் ஆண்டில் ஒரு குழு அமைக்கப்பட்டது; இந்தக் குழுவினர், எந்தெந்த இடங்களை மேலும் அழகுபடுத்தலாம் என்பதுபற்றி ஓர் அறிக்கை தயாரித்துக் கொடுத்தனர்.

அந்த அறிக்கையில் கண்டுள்ள சிபாரிசுகள் பற்றி மேற்கொண்டு ஆராய ஒரு நிரந்தரக் குழு அமைக்கப்பட்டது; அந்தக் குழுவினர், சென்னையை மேலும் அழகுபடுத்துவதுபற்றி ஆலோசனை தெரிவிப்பதற்காக ஐக்கிய நாடுகள் அவையைச் சேர்ந்த நில -- நீர் அழகுக் கலை நிபுணர் பேராசிரியர் ஸ்கின்னர் என்பவரை அழைப்பது என்று முடிவு செய்தனர்.

தற்போது ஐக்கிய நாடுகள் ஆதரவில், டில்லியில் உள்ள சிற்பக் கலைப் பள்ளிக்கூடத்தில் பணியாற்றும் பேராசிரியர் ஸ்கின்னர், இன்று சென்னைக்கு வருகிறார்; இங்கு ஒரு வார காலம் தங்கியிருந்து எல்லா இடங்களையும் சுற்றிப் பார்ப்பார்; எந்தெந்த இடங்களை எப்படி -- எப்படி இன்னும் அழகுபடுத்தலாம் என்பதுபற்றி அவர் ஆலோசனை கூறுவார்."

கழகப் பணி தொடர்ந்திட காமாட்சி ஜெயராமனை வெற்றி பெறச் செய்வீர்

சென்னை 19-வது வட்ட வாக்காளப் பெருமக்களுக்குப் பொதுச்செயலாளர் வேண்டுகோள்

சென்னை, அக். 13—

"சென்னை 19-வது வட்டத்தில் நடைபெறும் மாநகராட்சி இடைத் தேர்தலில் திருமதி காமாட்சி ஜெயராமன் அவர்களை ஆதரித்து வெற்றி தேடித் தருமாறு விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

1968-ல் நடைபெற்ற மாநகராட்சித் தேர்தலில் இவ்வட்டம் சிறப்பான வெற்றியைத் தேடித் தந்ததை நாம் அறிவோம்; தொடர்ந்து அத்தகைய வெற்றியைத் தேடித் தர இருக்கும் பகுதியாகும் இப்பகுதி. அறிஞர் அண்ணாவின் சுட்டுவிரல் காட்டும் பக்கம் நிற்கும் பகுதிக் கழகம் இடும் கட்டளையை நிறைவேற்றும் பகுதி இப்பகுதி.

தோழர் ஜெயராமன் கழகத்துக்காக அரும்பாடுபட்டவர்; நீண்ட நெடுங்காலமாகக் கழகத்துடன் இணைந்து அரும்பணியாற்றியவர்.

ஒரு இனத்தினர் எங்களை எவ்வளவோ இழித்தும் பழித்தும் பேசிய காலத்தில், அந்த இனத்தைச் சேர்ந்த தோழர் ஜெயராமன், கழகக் கொள்கை--உறுதிப்பாட்டுடன் கழகத்துடன் இணைந்து பாடுபட்டவர்! வறுமை தாண்டவமாடிய காலத்தில்கூட, நேரம்--நினைப்பு--உழைப்பு அத்தனையையும் கழகத்திற்கே அர்ப்பணித்தவர்! வீட்டிலே இருந்த நேரத்தைவிட, தன் பகுதியின் சாலைகளிலே அவர் இருந்த நேரமே அதிகமாகும்; அத்தகைய முறையில் அவர் பொதுத் தொண்டில் ஈடுபாடு கொண்டிருந்தார்; தன் குடும்பத்தைப் பற்றி அதிகம் கவலைப்படாமல்--சுயநலம் இல்லாமல்--பணத்தின்மீது ஆசை இல்லாமல் அரும்பெரும் தொண்டாற்றிய நண்பர் ஆவார்!

அவரை ஆதரித்து அப்போது நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில்--இதே இடத்தில் நான் பேசினேன்; அவரும் வெற்றி பெற்றார்; வெற்றி பெற்றபின் எப்படியெல்லாம் பணியாற்றினார் என்பதை நீங்கள் அறிவீர்கள்; அவருக்குமுன் இருந்த உறுப்பினர் யாரும் அவரைப்போல் வேலைசெய்தார்களா என்று சிந்திக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்; அவர்கள் தான் வளர்ந்தார்களே அல்லாமல் தொகுதி வளரவில்லை!

மாநகராட்சி தி. மு. கழக உறுப்பினர்களை நீங்கள் அடிக்கடி முச்சந்தியில் காண முடியும்; ஏழைகள் வாழும் இடங்களில் எல்லாம் மாநகராட்சி தி. மு. கழக உறுப்பினர்களை நீங்கள் காணமுடியும்; மக்களிடத்தில் நெருங்கிப் பழகி அவர்களுடைய குறைகளைக் கேட்டு முடிந்ததை செய்யும் ஆற்றல் மிக்கவர்கள் கழக உறுப்பினர்கள்!

கழகத்தைச் சேர்ந்த சாதாரணமானவர்கள் எல்லாம், மேயர்கள் -- துணை மேயர்களாக ஆனார்கள்; ஆனால் காங்கிரசில் இராஜா சர் முத்தையா செட்டியார், மேயராக இருந்தார்; இப்போதும் அடையாறு அரண்மனையில்தான் இருக்கிறார்கள்; அவருடைய தம்பி மேயராக இருந்தார் -- அவர் இப்போது விமானம் மூலம் நாட்டுக்கு நாடு சென்று, தன்நிலை வளர--தன் குடும்பம் வளர--தன் வியாபாரம் வளரப் பாடுபடுகிறார்களேயல்லாமல், மாநகராட்சி பற்றியோ -- மாநகராட்சி மக்களைப் பற்றியோ அவர்களுக்குக் கவலை இல்லை. கழக உறுப்பினர்களைப் போல் தொடர்ந்து பொதுப் பணியில் ஈடுபடுவதில்லை.

ஆகவேதான், தொண்டருள் தொண்டரான தோழர் ஜெயராமன் அவர்களை நீங்கள் வெற்றியடையச் செய்தீர்கள்; அவர் எதிர்பாராதவிதமாக இயற்கையெய்தியதால், அவர் விட்ட பணிகளைத் தொடர்ந்து செய்ய அவர் மனைவியையே இத்தேர்தலில் நிறுத்திவைத்திருக்கிறோம்.

அவருடைய துணைவியார் துக்கம் கொண்டாட வேண்டிய கட்டத்தில் இருக்க வேண்டியவர்; துக்கத்தை மறந்து -- துயரத்தை மறந்து-- கண்ணீரைத் துடைத்துக்கொண்டு ---- தன் கணவர் விட்ட பணிகளைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற கடமை உணர்வுடன் அவர்களும் தேர்தலில் நிற்க முன்வந்திருக்கிறார்கள்; இவ்வட்டத்தில் நிற்க அவருக்கு எல்லாத் தகுதியும்--திறமையும் உண்டு; வட்டமும் சீர்பெறும்--சிறப்புப் பெறும்--வலிவு பெறும்--பொலிவு பெறும் என்பதில் ஐயமில்லை.

வரும் மேயர் தேர்தலில் பிராமண குலத்தைச் சேர்ந்தவர்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதை அறிந்த நாங்கள், அன்றே கழகத்தில் பற்றுடைய தோழர் ஜெயராமனை நிற்கச் செய்தோம்; அப்போது அறிஞர் அண்ணா அவர்களும் எங்களோடு இருந்தார்கள்; வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்தாற்போல் இயற்கை வஞ்சித்து விட்டது.

'என்ன செய்வது' என்று ஏங்கிக் கொண்டிருந்த சமயத்தில், அம்மையார் அவர்கள் தேர்தலில் நிற்க முன்வந்திருக்கிறார்கள்; அவர்களை வெற்றியடையச் செய்வது உங்கள் அனைவரின் பொறுப்பாகும்.

அம்மையார் வெற்றி பெற்றால் பலன் பெறப்போவது இப்பகுதியாகும் -- பெண் குலமாகும்; அவர்கள் தோல்வியுற்றால் -- பணபலம், படைபலம் வென்றால்--நீங்கள் பெறப்போகும் நன்மை என்ன?--இதை நீங்கள் ஒவ்வொருவரும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்தப் பழம்பெரும் பகுதி--மிக நெருக்கடி நிறைந்த பகுதி; உழைப்பாளர்கள் மிகுந்த பகுதி--போக்குவரத்து மிகுந்த பகுதி; இது சீர்பெற--சிறப்புப்பெற திருமதி காமாட்சி ஜெயராமன் அவர்களை ஆதரிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அந்த வகையில், மிகப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டிய நேரம்; கடமை ஆற்றினால் பலன் கிடைக்கும்; இல்லை என்றால் வேறு எந்தத் தொகுதிக்காகிலும் அந்த நன்மை சென்றுவிடும்; நீங்கள் சிறிது ஏமாந்துவிடுவீர்களேயானால், நாங்கள்கூட இந்தத் தொகுதிக்குத் திரும்பிவரும் நிலை ஏற்படாது.

ஆகவே நீங்கள் உதயசூரியன் சின்னத்தில் முத்திரையிட வேண்டுகிறேன்; மாநகராட்சியிலும்--மாநில அரசிலும் ஒரே கட்சி ஆட்சியில் இருப்பதால், பல நன்மைகள் பெற முடியும்."

--நாவலர் இரா. நெடுஞ்செழியன்

(சென்னை 19-வது வட்டத் தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில்)

வருமான வரியை வசூலிப்பது யார்? மத்திய அரசா--மாநில அரசா?

பிரச்சினையைப் பரிசீலிக்க நிபுணர் குழு நியமனம்

முதலமைச்சர்கள் மாநாட்டின் முடிவு -- திட்டச் செலவைக் குறைப்பதற்கு எதிர்ப்பு

புதுடில்லி, அக். 13—

விவசாய வருமானங்களையும் -- மற்ற வருமானங்களையும் இணைத்து ஒரே வருமான வரியை விதிக்கலாம் என்று மத்திய அரசு தெரிவித்த யோசனையின் எல்லா அம்சங்களையும் பரிசீலிப்பதற்காக நிபுணர்கள் குழு ஒன்றை நியமிப்பது என்று முதலமைச்சர்கள் மாநாடு முடிவு செய்தது.

விவசாய வருமானத்மீது வரி விதிக்கும் அதிகாரத்தை மத்திய அரசுக்கு மாற்றும் யோசனையை எல்லா முதலமைச்சர்களும் கடுமையாக எதிர்த்ததால், இக்குழுவை அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

நிபுணர் குழு தன்னுடைய பணியை 6-மாதங்களுக்குள் முடித்துவிடும்; விவசாய வருமானம், மற்ற வருமானங்களுக்கு வரி விதிப்பது -- வரி விதிப்பு வரியை யார் வசூலிப்பது -- மத்திய அரசா, மாநில அரசா என்பது போன்ற எல்லாப் பிரச்சினைகளையும் குழு பரிசீலிக்கும்.

"வரி விதிப்பு படிப்படியான முறையில் இருக்கவேண்டும்" என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் வலியுறுத்தல்

"எந்தச் சூழ்நிலையிலும் விவசாய வருமான வரி வசூலிக்கப்படுவதை மத்திய அரசிடம் ஒப்படைக்கும் வகையில் தமிழ்நாடு அரசு இல்லை; விவசாயம் மற்றும் ஏனைய வருமான வரிகளை ஒன்றாக இணைப்பது குறித்து ஆட்சேபமில்லை; ஆனால், இப்போது மத்திய அரசு வசூலித்துவரும் வருமான வரியையும் சேர்த்து மாநிலங்களே வசூலிக்கும்படி அனுமதிக்கப்பட வேண்டும்" என்று மாநாட்டில் முதலமைச்சர் கருணாநிதி வற்புறுத்தினார்.

கிராமக் கடன் பத்திரங்கள்

தமிழ்நாடு, பஞ்சாப் திட்டங்களைப் போல் கூடுதல் நிதி வசதிகளைத் திரட்டுவதற்காகக் கிராமக் கடன் பத்திரங்களை வெளியிடும் திட்டத்தை எல்லா மாநில முதலமைச்சர்களும் பரிசீலித்துப் பார்க்க வேண்டும் என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

திட்டச் செலவு குறைப்பா?

திட்டச் செலவுகளைக் குறைப்பதானது, முதலீட்டுத் திட்டங்களை மட்டுமன்றி வேலை வாய்ப்புகளையும் பாதிக்கக்கூடுமாதலால், 'திட்டச் செலவைக் குறைக்கக் கூடாது' என்று எல்லா முதலமைச்சர்களும் ஒருமனதாகக் கருத்தறிவித்தனர்.

மத்திய அரசின் ஊழியர் குழுவால் ஏற்படும் சிரமங்கள்

ஊதியக் குழுக்களை மத்திய அரசு அமைப்பதனால் மாநிலங்களுக்கு ஏற்படும் சிரமங்களை எடுத்துக் காட்டி முதலமைச்சர்கள் வலியுறுத்தினர்; 'தன்னுடைய ஊழியர்களின் கிராக்கிப் படியை மத்திய அரசு உயர்த்தும்போது, மாநில அரசுகளும் அவ்வாறே செய்ய வேண்டியிருக்கிறது' என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.

"இடது கையால் கொடுப்பதை வலது கையால் எடுத்துக்கொள்கிறீர்கள்" என்று ஒரிசா, மத்தியப் பிரதேச முதலமைச்சர்கள் சுட்டிக்காட்டினர்.

அகதிகளுக்கான செலவு ரூ. 500 கோடியா?

'அகதிகள் எண்ணிக்கை 90 இலட்சத்தைக் கடந்துவிட்டது; டிசம்பர் வரையில் அவர்களுடைய செலவுக்கு வரவு--செலவுத் திட்டத்தில் ரூ. 260 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது; நடப்பு நிதியாண்டில் அச்செலவு ரூ. 500 கோடியாக உயர்ந்துவிடும்" என்று நிதியமைச்சர் ஒய். பி. சவாண் கோடிட்டுக் காட்டினார்.

ஈக்களை ஒழிக்கும் விளக்கு

ஈக்களின் தொல்லையை ஒழிப்பதற்கு ஒரு புதுமையான வழியைப் பிரிட்டனில் கண்டுபிடித்துள்ளனர்.

ஒரு தனி ரக கருப்பு ஒளி' வீசும் மாயவலை மின்விளக்குதான் ஈக்களைக் கவர்ந்து அழிக்கிறது!

வீட்டின் மத்தியில் இந்த 20-வாட் 'கருப்பு ஒளி' விளக்கை மாட்டிவைக்க வேண்டும். 'மாயவலை மின்விளக்கு' என்று அழைக்கப்படும் இவ்விளக்கின் தனி நிறமுள்ள ஒளி, ஈக்களைக் கவரும் தன்மையுடையது.

இந்த விளக்கு எரியும்போது, வீட்டின் எந்தப் பகுதியில சுற்றி வந்தாலும் ஈக்கள் உடனே இதனை நாடி வந்து விழுந்துவிடும்.

விளக்கின் மேலேயுள்ள உலோக வலைமீது இந்த ஈக்கள் பட்டதுமே உடனே கொல்லப்பட்டுவிடுகின்றன; இதனுள்ளேயே வைக்கப்பட்டுள்ள ஒரு 'டிரே'யில் அவை சேர்ந்துவிடுகின்றன.

இந்தியாவின் மேற்கு எல்லையில் பாகிஸ்தான் படைக் குவிப்பு

இராணுவ நடமாட்டம் மும்முரமாகிறது

கிராமங்களிலிருந்து மக்களை வெளியேற்றுகின்றனர்

சண்டிகார், அக். 13—

இந்தியாவின் மேற்கு எல்லை நெடுகிலும் முன்னணி நிலைகளுக்குப் பாகிஸ்தான் இராணுவம் கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருப்பதாக எல்லைக்கு அப்பாலிருந்து வந்துள்ள நம்பத்தக்க தகவல்கள் கூறின.

மேற்குப் பாகிஸ்தானிலுள்ள இராணுவத்தின் சுமார் 80 சதவிகிதம், இப்பொழுது முன்னணி நிலையில் உள்ளன; சில இடங்களில் எல்லையிலிருந்து சில நூறு கெச தூரத்தில் படைகள் இருக்கின்றன.

பாகிஸ்தான் இராணுவ நடமாட்டம் பெரும் அளவில் நீடிப்பதாகவும் எல்லைப் பகுதிகளிலிருந்து மக்களை பாகிஸ்தான் அதிகாரிகள் வெளியேற்றுவதாகவும் அத்தகவல்கள் கூறின.

பஞ்சாபுக்கு எதிரில் உள்ள சில பாகிஸ்தான் கிராமங்களில், தங்கள் உடைமைகளுடன் மக்கள் செல்வது காணப்பட்டது.

இரு நாடுகளின் எல்லை நெடுகிலும் மும்முரமான வேவு வேலையில் பாகிஸ்தான் இராணுவம் ஈடுபட்டிருக்கிறது.

கடந்த சில நாட்களில் தங்கள் பகுதியில் உள்ள போர்க்கள அரண்களில் பாகிஸ்தான் படையினர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

இராஜஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் படைகள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன.

வங்காள தேசத்துக்குக் கூடுதல் படைகளை அனுப்பியதால் ஏற்பட்ட பற்றாக்குறையை நிறைவு செய்யப் புதிய படைகளை பாகிஸ்தான் திரட்டியிருக்கிறது.

பாகிஸ்தானில் போர் வெறி காணப்படுவதாக அங்கிருந்து வந்த பயணிகள் கூறினர்.

'இந்தியாவை நசுக்கு' என்று சுவரொட்டிகள்

லாகூர் முதலிய நகரங்கள் இராணுவ முகாம்கள் போல மாற்றப்பட்டுள்ளன; அங்கு, 'இந்தியாவை நசுக்கு' என எழுதப்பட்ட சுவரொட்டிகள் காணப்பட்டதாகக் கூறினர்.

'போர் மூளக் கூடும்' கெய்ரோ பத்திரிகை எச்சரிக்கை

"சர்வதேச சமுதாயம் விரைவில் தலையிடாவிடில், வங்காள தேசப் பிரச்சினை தொடர்பாக அடுத்த சில மாதங்களில் இந்தியா—பாகிஸ்தான் இடையே போர் மூளக் கூடும்"

என்று ஒரு தனிக் கட்டுரையில், அரசு தொடர்புள்ள 'அல் அரம்' என்ற கெய்ரோ பத்திரிகை எச்சரித்தது.

வங்காளதேசம் பற்றி டில்லியில் நடந்த சர்வதேச மாநாட்டுக்கு வந்த அப்பத்திரிகை ஆசிரியர் டாக்டர் மக்சுதால் அக்கட்டுரை எழுதப்பட்டது; அகதிகள் பாதுகாப்பாக நாடு திரும்ப அரசியல் தீர்வு காண வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

"முதலில் ஷேக் முஜிபுர்ரகிமானை உடனே விடுவித்து, 1970-ல் பாகிஸ்தானில் நடந்த தேர்தலை அங்கீகரிக்க வேண்டும்" என்று அவர் வலியுறுத்தினார்.

அசாமில் இருட்டடிப்பு

எண்ணெய் ஆலைப் பகுதிகளில் சோதனை

காரணம் பற்றி விளக்கம்

கௌகத்தி, அக். 12—

கௌகத்தியிலும் -- அதைச் சுற்றிலும் உள்ள எண்ணெய் ஆலைகள், வடக்கு அசாமில் எண்ணெய் ஆலைகள் உள்ள பகுதிகளிலும் நேற்று நள்ளிரவிலிருந்து இருட்டடிப்புச் சோதனை நடைபெறுகிறது.

இவைகள்மீது விமானத் தாக்குதல் நடைபெறுமானால் முன்னெச்சரிக்கையாகக் கடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முறையிலேயே இந்தச் சோதனை நடைபெறுகிறது.

அசாமில் உள்ள எண்ணெய் ஆலைகள்மீது பாகிஸ்தான் விமானத் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சம் இருந்துவருகிறது.

தமிழக அரசு பஸ் ஊழியர்களுக்கு ஊக்கப் போனசு

16,500 ஊழியர்கள் பயனடைவர்

ரூ. 140 முதல் ரூ. 500 வரை பெறுவர்

மற்றும் பல்வேறு சலுகைகள் பற்றி அறிவிப்பு

சென்னை, அக். 13—

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்தில் உள்ள போக்குவரத்துப் பிரிவு – தொழில் நுணுக்கப் பிரிவு ஊழியர்களுக்கான போனசு பற்றித் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் கலந்து பேசிய பிறகு, அந்த ஊழியர்களுக்கு ஊக்கப் போனசாக ரூ. 35 இலட்சம் கொடுக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

ஏறத்தாழ 16,500 ஊழியர்கள் இதனால் பயன் அடைவார்கள்; ஊழியர்களின் ஒரு மாத அடிப்படைச் சம்பளம் விகிதம் இந்தப் போனசு வழங்கப்படும்; குறைந்தபட்சம் ரூ. 140-ம் அதிகபட்சம் ரூ. 500-ம் வழங்கப்படும்.

இந்த ஆண்டு ரூ. 35 இலட்சம் வழங்கப்படுகிறது; கடந்த ஆண்டு ரூ. 23 இலட்சம்தான் போனசாகக் கொடுக்கப்பட்டது; அதாவது, கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 50 சதவிகிதம் அதிகமாகும்.

ஆஜர் போனசு அதிகரிக்கிறது

இத்துடன், வேலைக்கு ஒழுங்காக வந்ததற்கான ஆஜர் போனசும் (அட்டெண்டன்சு போனசு) ஊழியர்கள் அனைவருக்கும் கொடுக்கப்படும்; மாதத்திற்கு ரூ. 7.50 அல்லது பழைய அடிப்படைச் சம்பளத்தில் அரை மாத சம்பளம் -- இரண்டில் எது அதிகமோ அது கொடுக்கப்படும்; ஆகவே, இந்த வகையிலும் குறைந்தபட்சம் ரூ. 90 அதிகமாகப் பெறுவார்கள்.

அக்டோபர் 1-ந்தேதியிலிருந்து இந்த ஆஜர் போனசு மாதம் ரூ. 7.50-லிருந்து ரூ. 10 ஆக உயர்த்தப்படும்.

விடுமுறைச் சம்பளம்

அரசுப் பஸ் போக்குவரத்து ஊழியர்கள், தாங்கள் சேமித்து வைத்திருக்கும் விடுமுறை நாட்களைப் பணமாக மாற்றிக் கொள்வதற்கும் அனுமதிக்கப்படுவார்கள்.

தொழிற்சங்கத்தில் சேர்ந்திருப்பது பற்றிச் சரி பார்க்கும் திட்டம், போக்குவரத்துத் துறையில் அறிமுகப்படுத்த ஒப்புக்கொள்ளப்பட்டது; அதன்படி, நிர்வாகத்தினர், ஊழியர்களிடமிருந்து தொழிற் சங்கக் கட்டணத்தை வசூலித்து – மாதா மாதம் தொழிற் சங்கத்திற்குக் கட்டிவிடுவார்கள்.

ஊக்கப் போனசு அளவு எவ்வளவு இருக்கவேண்டும் என்பது பற்றித் தீர்மானிக்க இப்போது இருக்கும் முறையைத் திருத்தியமைப்பது பற்றித் துறையுடன் பேசி முடிவு செய்யத் தொழிற்சங்கங்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றன.

இப்போதுள்ள ஊக்கப் போனசு – சேமிக்கப்பட்ட போனசுத் திட்டம் ஆகியவைகளுக்குப் பதிலாக போக்குவரத்துத் துறை —தொழில் நுணுக்கத்துறை எல்லாவற்றிற்குமே பொருந்தக் கூடிய ஒரே சீரான ஊக்கப் போனசு, வருமானத்திற்கும்—செயல் திறமைக்கும் ஒப்ப வருகிற ஆண்டுக்குக் கணக்கிடப்படும்.

இந்தப் போனசு மூன்று நாட்களுக்குள் கொடுக்கப்பட்டுவிடும்.

போக்குவரத்துத்துறை அமைச்சர்

ச. இராமச்சந்திரன்

நிகழ்ச்சிகள்

அக். 14 காலை 8-30 மணி: விழுப்புரம்; 9-மணி: வடக்குச்சிப்பாளையம்—புதிய பள்ளிக் கட்டடத் திறப்பு -- தண்ணீர்த் தொட்டி அடிக்கல் நாட்டுதல் -- மின்விளக்கு ஏற்று விழா — கேசவ அறவை ஆலை கட்டடத் திறப்பு; 10 மணி: நேமூர் பள்ளிக் கட்டடத் திறப்பு—ஊராட்சிமன்றக் கட்டடத் திறப்பு; 11-30 மணி: முட்டத்தூர் பள்ளிக் கட்டடத் திறப்பு; மாலை 3-30 மணி: விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 5-மணி: சண்டமானடி குடிநீர்த் தேக்கத் தொட்டித் திறப்பு—டாக்டர் கலைஞர் கருணாநிதி வானொலி நிலையம், படிப்பகம் திறப்பு—பள்ளிக் கட்டட அடிக்கல் நாட்டுதல் — மின் விளக்கேற்றுதல் — ஊராட்சி வரவேற்பு — அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம்; இரவு 7 மணி: விக்கிரவாண்டி—வட்டக் கழக அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம்; இரவு 8 30 மணி: விழுப்புரம் நகரக் கழக அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம்.

அரசுப் பேருந்து ஓட்டுநர்களைக் கண்காணிக்க புதிய கருவி

கட்டாயம் பஸ் நிற்பதற்கு இடங்கள் நிர்ணயிப்பு

சென்னை, அக். 10—

அரசு பஸ்கள் எவ்வளவு வேகத்தில் செல்கின்றன -- எத்தனை இடங்களில் எவ்வளவு நேரம் நிற்கின்றன -- என்பதை அறிய அந்த பஸ்களில் 'டாக்கோ மீட்டர்' என்னும் கருவியைப் பொருத்துவதற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை திட்டமிட்டிருக்கிறது.

இந்தக் கருவி தரும் விவரத்தைக் கொண்டு வேகமாக ஓட்டும் டிரைவர்கள்மீது நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

துவக்கத்தில் நீண்ட தூர எக்ஸ்பிரஸ் பஸ்களில் இந்தக் கருவியைப் பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது.

சென்னை நகரில் 50 முக்கிய இடங்களில் 'எல்' வடிவில் நிறுத்தக் கட்டங்கள் போடப்பட்டு வருகின்றன. எல்லா அரசு பஸ்களும் இங்கு கட்டாயமாக நிறுத்தப்பட வேண்டும்.

பல முக்கிய இடங்களில் பயணிகள் நெரிசலைப் பரிசீலித்துப் போலீசுத் துறையின் ஆலோசனையுடன் இந்த 50 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன; இங்கு எல்லாப் பஸ்களும் கண்டிப்பாக நின்று பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டும்; வண்டிகளை நிறுத்தாத டிரைவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

பழிவாங்கப்படுகிறது தமிழகம்

நிதி ஒதுக்கீட்டில் டில்லி இழைக்கும் அநீதி

முதலமைச்சர்கள் மாநாட்டில் கலைஞர் கருணாநிதி குமுறல்

புதுடில்லி, அக். 12—

"ஒவ்வொரு துறையிலும், மத்திய அரசிடமிருந்து நிதி வழங்கப்படுவதில் நாங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறோம்; 'கடவுள் நல்லவர்களைத்தான் சோதிப்பார்' என்பதுபோல் மத்திய அரசு எங்களைத்தான் அதிகமாகச் சோதிக்கிறது"

என்று, தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள், முதலமைச்சர்கள் மாநாட்டில் மிகுந்த வேதனையோடு குறிப்பிட்டார்.

"கூடியவரையில் சிக்கனமாக நிர்வாகம் நடத்திக் காட்டி வருவதற்காகத் தமிழ்நாடு அரசுக்குக் கிடைக்கும் பரிசா இது?" என்றும் அவர் கேட்டார்.

மத்திய அரசின் நிதி ஆதாரங்களைப் பெருக்க வழிவகை காண்பது குறித்து ஆராய்வதற்காக மத்திய நிதியமைச்சரால் கூட்டப்பட்ட இந்த மாநாட்டில், திட்டத் துறை அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியமும் கலந்துகொண்டார்.

காலையிலும் மாலையிலும் சுமார் 7 மணி நேரம் மாநாடு நடைபெற்றது.

குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெறும் பஞ்சாப், குசராத், மேற்கு வங்கம், கருநாடகம் ஆகிய மாநிலங்களின் ஆளுநர்கள் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தமது கருத்துரையை ஆங்கிலத்தில் நிகழ்த்தினர்; அவர் ஆற்றிய உரை வருமாறு :—

இந்திய அரசின் முயற்சிகட்கு உறுதுணையாக இருப்போம்

கிழக்கு வங்க அகதிகளுக்கு ஆறுதல் வழங்குவதிலும்—அதன் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் இந்திய அரசு எடுத்துள்ள முயற்சிகளுக்கு நாங்கள் என்றும் உறுதுணையாக இருப்போம் என்று தமிழ்நாட்டு மக்களின் சார்பில் உறுதி கூறிக்கொள்கிறேன்.

திட்டமிட்ட வளர்ச்சிக்கு ஊந்தகமாகிவிடக் கூடாது

கிழக்க வங்க நெருக்கடி, இந்நாட்டின் வருவாய் ஆதாரத்தைப் பாதித்துள்ளது என்பதை நாங்கள் உணருகிறோம்; ஆனால், நாட்டின் திட்டமிட்ட வளர்ச்சிக்கு அது குந்தமாக ஆகிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது.

நிதி ஆதாரங்களைத் திரட்ட....

நமது பாதுகாப்புத் தேவைகளையும்—பொருளாதார வளர்ச்சித் தேவைகளையும் நிறைவு செய்வதற்குக் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்ட நம்மால் இயன்றதையெல்லாம் செய்யவேண்டும்; அதற்காக எங்கள் மாநிலத்தில் எடுத்துள்ள முயற்சிகளைக் கூற விரும்புகிறேன்.

இன்னமும் குறைக்க எங்களால் இயலுமா?

"ரூ. 85 கோடி வரையில், வரி வருவாய் மூலம் திரட்ட வேண்டும்" என்று திட்ட ஆணைக் குழு—குறிக்கோள் அளவை வரையறுத்தது; திட்டம் பெரிதாக இருந்தால்தான் மக்களிடமிருந்து அதற்கேற்ப வரித் தொகை திரட்ட முடியும்—மக்களும் உற்சாகமாக வரி தர முன்வருவார்கள்.

எமது ஐந்தாண்டுத் திட்டம் ரூ. 624 கோடி அளவுக்கு இருக்க வேண்டுமென நாங்கள் கேட்டிருந்தோம்; எவ்வளவுதான் குறைக்க முயன்றாலும் நாங்கள் அதை ரூ. 575 கோடிக்குக் கீழே குறைக்க முடியாது.

எங்கள் மாநிலத் திட்டம் ரூ. 575 கோடிக்கு இருந்தாலன்றி, நாங்கள் ரூ. 85 கோடி அளவுக்கு வரி திரட்ட வேண்டும் என்பது ஏற்றதாக இருக்காது என்று எடுத்துக் காட்டினோம்.

எனினும், திட்ட ஆணைக் குழு நாங்கள் ரூ. 85 கோடி அளவுக்கு வரி திரட்ட வேண்டும் என எதிர்பார்த்திருக்க, கூடுதல் நிதி திரட்டுவதற்கு நாங்கள் எடுத்த நடவடிக்கையின் பயனாக நான்காவது திட்டக் காலத்தில் ஏறக்குறைய ரூ. 120 கோடி அளவுக்கு வரி வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

முன்னேற்றத் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டுவந்தோம்

எல்லா மாநிலங்களும் சேர்ந்து ரூ. 775 கோடி அளவுக்கு வரி வருவாய் திரட்டியிருக்க நாங்கள் அதில் 15 சதவீதம் திரட்டியிருக்கிறோம்; எங்கள் முயற்சியின் பயனாக வரி அமைப்பின் தன்மையே ஓரளவுக்கு மாறியுள்ளது.

சென்னை மாநகர் வளர்ச்சிக்கு நிதி ஆதாரங்கள் திரட்டுவதற்காகவும், பெரிய நகரங்களில் நெரிசலைக் குறைப்பதற்காகவும், நகராட்சி எல்லைகளுக்குள் விற்பனை வரிமீது மேல் வரி விதித்துள்ளோம்; நகர்ப்புற நில வரியை அதிக வசதி படைத்தவர்கள் கூடுதல் வரி விகிதம் கொடுக்க வேண்டும்படி மாற்றி அமைத்துள்ளோம்.

அதன்படி, சிறிய மனை உடைமையாளர்கள் அதன் மதிப்பில் 5 சதவிகிதமும், பெரிய மனை உடைமையாளர்கள் அதிக அளவு 1 சதவிகிதமும் வரி செலுத்தும் முன்னேற்றத் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வந்துள்ளோம்.

விவசாய வரி அமைப்பை மாற்றி அமைத்துள்ளோம்

விவசாய வரி அமைப்பையும் மாற்றி அமைத்துள்ளோம். வரியை உடன்படடுத் தீர்த்துக் கொள்வதற்கான அளவைக் குறைத்து பெரிய நிலஉடைமையாளர்களை, 'வருமான வரிக் கணக்கின்படிதான் கொடுக்க வேண்டும்' என்று வழிவகுத்துள்ளோம்.

வளர்ச்சித் துறைகளுக்கு அப்பாற்பட்ட செலவினங்களைப் பெரும் அளவில் குறைப்பதற்கும் முயற்சி எடுத்துள்ளோம்.

திட்டத்தின்கீழ் வராத எங்கள் செலவு 1969—70-ம் ஆண்டில் ரூ. 70.50 கோடியாக இருந்தது; 1971—72-ம் ஆண்டில் ரூ. 70.60 கோடியாகவே வைத்து வரப்பட்டுள்ளது.

செலவு அதிகரிக்கவில்லை

சம்பள ஆணைக் குழுவின் பரிவுரைகளைச் செயல்படுத்துவதால் ஏற்படக்கூடிய செலவுகளைச் சேர்த்துப் பார்த்தாலும், வளர்ச்சியின்பாற்படாத மொத்தச் செலவு ஆண்டு ஒன்றுக்கு 2 அல்லது 3 சதவீதத்திற்குமேல் அதிகப்படவில்லை.

புறக்கணிப்பின் எதிரொலி

இத்தனை முயற்சிகளுக்கிடையே எங்கள் நிதி நிலைமை இடர்ப்பாடு உள்ளதாகவே இருக்கிறது.

மத்திய அரசு, மாநிலங்களுக்குத் தொகை வழங்குவதில், தமிழ்நாட்டின் நியாயமான உரிமை பல காலமாகவே புறக்கணிக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும்.

நிதி ஆணைக் குழு தவறியதால் உரிய தொகை கிடைக்கவில்லை

பத்தாண்டுக் காலமாக சம்பள ஆணைக் குழு எதையும் அமைக்கவில்லை என்பதையும்—சம்பள விகிதங்களில் உள்ள ஏற்றத்தாழ்வுகளையும் ஐந்தாண்டு நிதி ஆணைக் குழுவிடம் தெளிவாக எடுத்துரைத்தோம்.

ஆயினும், எங்கள் மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய தொகையை வரையறுக்கையில் சம்பள விகிதாச்சாரங்களை மாற்றியமைப்பதில் ஏற்படக்கூடும் செலவு உயர்வைக் கணக்கில் சேர்க்க நிதி ஆணைக் குழு தவறிவிட்டது.

"குறிப்பிட்ட தேதிக்கு முன்னர் சம்பள ஆணைக் குழு நியமிக்கப்பட்டிருந்தால்தான், அந்தச் செலவு உயர்வு கணக்கில் சேர்க்கப்படும்" என்பது எங்களுக்கு முன்னரே தெரிவிக்கப்படவில்லை; இதனால், திட்டக் காலத்தில் சுமார் ரூ. 100 கோடி—எங்களுக்குக் கிடைக்க வேண்டிய தொகை—கிடைக்காமல்போய் விட்டது!

உறுதிமொழி எங்கே?

1966—71-ம் ஆண்டுக்கான நான்காவது திட்டக்கால அளவில் ரூ. 250 கோடி மத்திய உதவி கிடைக்கும் என்று உறுதி கூறப்பட்டது; ஆனால் தொகை வழங்குவதில் புதிய அடிப்படை கடைபிடிக்கப்பட்டு—எங்களுக்கு வரவேண்டிய தொகை ரூ. 202 கோடியாகக் குறைக்கப்பட்டது.

இந்தப் புறக்கணிப்பு ஏன்?

சிறப்பு நிதியுதவித் தொகை திட்டத்தில் எல்லா மாநிலங்களுக்கும் ரூ. 800 கோடிக்குமேல் உதவி அளிக்கப்பட்டிருக்க, எங்களுக்கு ரூ. 7 கோடி மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, எப்படிப் பார்த்தாலும், ஒவ்வொரு துறையிலும் மத்திய அரசிடமிருந்து நிதி வழங்கப்படுவதில் நாங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறோம்.

அழுத்தும் கடன் சுமை

எங்கள் மாநிலத்தை அழுத்திக் கொண்டிருக்கும் கடன் சுமையை நான் பலகாலும் சுட்டிக் காட்டியுள்ளேன்.

மத்திய அரசு எங்களுக்குக் கடனாக ரூ. 140 கோடி கொடுத்திருக்க, நாங்கள் திட்டக் காலத்தில் ஏறக்குறைய ரூ. 150 கோடி மத்திய அரசுக்குச் செலுத்த வேண்டியிருக்கிறது.

1971—72-ம் ஆண்டில் எங்களுக்கு ரூ. 28.28 கோடி மத்திய கடன் உதவியாகக் கிடைக்கும்; ஆனால் அந்த ஆண்டில் நாங்கள் திருப்பிக் கொடுக்கவேண்டிய தொகையோ ரூ. 43 கோடியாகும்.

தொடர்ந்துவரும் அந்தக் கடன் சுமை எங்களுக்குப் பெரும் துன்பமாக இருக்கிறது.

அரசு ஊழியர் ஊதியம்—மத்திய அரசின் கடமை

அரசு ஊழியர்கள் ஊதியம் குறித்து தற்போதைய கொள்கையில் எழும் சிக்கல்களைப் பற்றி விளக்கி இந்திய அரசுக்கு விரிவான குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளோம்.

மத்திய அரசு நன்கு செயல்படுவதற்கும்—மத்திய நிறுவனங்கள் இயங்குவதற்கும் இன்றியமையாத ஆதார அமைப்பினைப் பேணிப் பாதுகாத்துவருவதில் மாநில அரசு ஊழியர்களுக்கும் பெரும் பங்கு உண்டு.

இதில், மாநில—மத்திய அரசு ஊழியர்களுக்கிடையே ஊதியப் பிரச்சினையில் பெரும் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படக்கூடாது.

விலைவாசி ஏறுவதால், எங்கள் ஊழியர்களின் ஊதியங்களை நாங்கள் உயர்த்துகிறோம்; ஆனால் விலைவாசிக் கொள்கை என்பது தேசிய நிலையிலேயே முடிவு செய்யப்படுகிறது.

எனவே, ஊதிய மாற்றப் பிரச்சினையையும் தேசிய நிலையிலேயே நாம் அணுகவேண்டும்.

குறிப்பிட்ட வரையறைக்குட்பட்டு நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற ஊதிய உயர்வுகளை மாநில அரசுகள் தத்தம் ஊழியர்களுக்குத் தருவதற்கு நிதியுதவி செய்யத் திட்டம் ஒன்று தீட்டப்பட வேண்டும்.

அந்தப் பகுதியிலுள்ள மாநில அரசுகளைக் கலந்தாலோசிக்காமல் மத்திய அரசு ஊதிய விகிதங்களையோ, அகவிலைப் படி விகிதங்களையோ உயர்த்துதல் கூடாது.

நகர வளர்ச்சிக்குச் சிறப்பு உதவி திட்டம்

கிராமங்களின் பின்தங்கிய நிலைக்கு எந்த அளவுக்குச் சிறப்புடன் கொடுத்து முற்போக்குத் திட்டங்களைச் செயல்படுத்துகிறோமோ அதே அளவு முக்கியத்துவம் பெருநகர வளர்ச்சிக்கும் நாங்கள் அளிக்கவேண்டியுள்ளது.

குடிசை மாற்றுப் பணி—குடிநீர் வழங்கல்—கழிவு நீர் அகற்றல் ஆகிய ஒவ்வொன்றுக்கும் பெரும் அளவு முதலீடு செய்ய வேண்டியுள்ளது.

நாட்டின் வாணிபத்தையும்—தொழில் வளர்ச்சியையும் ஊக்கி வளர்ப்பவை மாநகரங்களேதான்; எனவே, மாநகர வளர்ச்சிக்கு உதவ வேண்டியது தேசிய அளவில் ஏற்கப்பட வேண்டிய பொறுப்பாகும்.

சென்னை மாநகரை மேம்படுத்த 1969—74-ம் ஆண்டுகளில் எங்களுக்கு ரூ. 80 கோடி தேவைப்படுகிறது; அதற்கு மத்திய அரசு சிறப்பு உதவித் திட்டம் ஒன்றை வகுக்க வேண்டும்.

சிக்கனக் கொள்கைக்கு மத்திய அரசு தரும் பரிசு

தற்போதைய நிதியுதவி அமைப்பின்படி, மாநில அரசுகளுக்குத் திட்டத்தின்பாற்படாத வருவாய்ப் பற்றுக்குறை குறித்து உதவி கிட்டுகிறது; அதாவது, திட்டத்தின்பாற்படாத பணிகள், குறித்த வருவாயைவிடச் செலவு அதிகமாக உள்ள மாநிலங்கள், வருவாய்க்கும்—செலவுகளுக்கும் உள்ள வேறுபாட்டுத் தொகையை உதவித் தொகையாகப் பெற முடிகிறது.

ஆனால், திட்டத்தின்பாற்படாத செலவைக் கருத்துடன் கவனித்துத் திட்டச் செலவைப் பெருக்கும் மாநிலம் எவ்வித உதவியும் பெறுவதில்லை; இது, சிக்கனமாக இருக்கும் கொள்கைக்கு மத்திய அரசு தரும் புதுவகையான பரிசு என்று கருதுகிறேன்.

கூடுதல் நிதி திரட்டுவதிலும், செலவைச் சிக்கனப்படுத்துவதிலும் நாங்கள் கட்டுப்பாட்டுடன் நடந்து வந்தபோதிலும் நிதிப் பிரச்சினையில் மத்திய அரசின் புறக்கணிப்பிற்கு ஆளாகியிருக்கிறோம்.

'கடவுள் நல்லவர்களைத்தான் சோதிப்பார்' என்று கூறுவார்கள்; இந்த ஒரு பிரச்சினையில் மத்திய அரசு கடவுள் நிலைமையில் உள்ளது!

சமனமற்றதோர் நிலை

எங்கள் மாநிலத்தின் அதிகப் பற்றுக்கள், எங்கள் மாநில வளர்ச்சியின் நியாயமான தேவைகளுக்கும்—கிடைக்கின்ற குறைவான நிதி வாயில்களுக்குமிடையே நிலவும் சமனமற்றதோர் நிலையைத்தான் பிரதிபலிக்கிறது.

தேசிய அளவில் அமைக்கப்படும் வளர்ச்சித் திட்டம், இலக்குகளுக்கு மேலாக அதிக அளவுக்கு நிதி வாயில்களைத் திரட்ட விரும்புகின்ற மாநிலங்களுக்கு உதவ வேண்டும்; அதேபோல் முதலீட்டிற்கு நிதி வாயில்களை அன்றாடச் செலவுகளிலிருந்து திருப்பிவிடவும் ஊக்குவிக்க வேண்டும்.

நீண்டகாலக் கடனாக மாற்றுவது அவசியம்

எங்களைப் போன்ற மாநிலங்களில் திட்டச் செலவின் அளவுகளைக் குறைக்க மத்திய அரசு திட்டக் குழு முயற்சி செய்வதற்குப் பதிலாக, தற்போதைய அதிகப் பற்றுகளைப் பத்தாண்டுக் காலத்தில் செலுத்தத்தக்க நீண்டக் காலக் கடனாக மாற்றுவதற்கு மத்திய அரசு ஒப்புக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

எந்த வேகத்தில் திட்டத்தை நிறைவேற்ற நம் ஆட்சி அமைப்பை முற்போக்கான நிலையில் நாம் தயார் செய்து வைக்கிறோமோ, அதே வேகத்தில் அதை நிறைவேற்றும் வகையில் உதவிகளும் அளிக்கப்பட வேண்டும்.

கிராமக் கடன் ஈட்டுறுதி ஆவணங்களை வெளியிடுவது குறித்தும், அதன் தொடர்பாக வரிச் சலுகைகள் அளிப்பது குறித்தும் உள்ள பரிந்துரைகளை நாங்கள் வரவேற்கிறோம்.

இந்த ஆண்டில், தமிழ்நாடு மின்வாரியத்திற்காக ரூ. 350 கோடிக்குக் கிராமக் கடன் ஈட்டுறுதி ஆவணங்களை நாங்கள் வெளியிடுகிறோம்.

கிராமப்புறங்களில் இன்று நிலவி வரும் வட்டி விகிதத்தை எடுத்துக்கொண்டால், ஈட்டுறுதி ஆவணங்களுக்குக் கொடுக்க முன்வந்துள்ள $7\frac{1}{2}$ சதவிகித வட்டி மிகக் குறைவு என்று நாங்கள் கருதுகிறோம்."

கல்வி – உள்ளாட்சித்துறை அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

அக். 15 காலை 10.30 மணி: பழனி—மதுரை மாவட்ட குடும்ப நலத் தீவிரப் பிரச்சாரத் துவக்க விழா; பிற்பகல் 12.30 மணி: பழனி—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; மாலை 4-மணி: சுக்கம நாயக்கன்பட்டி—பள்ளிக் கட்டடத் திறப்பு; 5-மணி: பழனியாண்டவர் பெண்கள் கலைக் கல்லூரி இலக்கிய மன்ற நிகழ்ச்சி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கைமூலம் தனக்கு அறிவிக்குமாறு மாநகராட்சி ஆணையர் திரு. ஜே. வி. எஸ். ராவ், வட்டப் பொறியர்கட்கு ஆணையிட்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (36, [illegible] செட்டித் தெரு, சென்னை-1) [illegible]